**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF : Judicial Magistrate, Thuraiyur.
Case No. : CC. 61 of 2021
Prosecution Witness : PW7

26.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துசாமி | Calling | : உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Father Name | : சின்னப்பன் | Religion | : |
| Village | : தத்தனூர் | Age | : 61 |
| Taluk | : உடையார்பாளையம் | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

1, 3 எதிரிகள் ஆஜர். 2, 4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் புலிவலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 24.10.2019 அன்று 15.00 மணிக்கு புலிவலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொருப்பில் இருந்தபோது செந்தில்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று மனு ரசீது எண்.339/2020 வழங்கி, விசாரணைக்கு பின்பு நிலைய குற்ற எண் 558/2020 சட்டப்பிரிவுகள் 294(பி),323, 355, 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

2. பின்னர் அன்றைய தினமே மாலை 4.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோவிந்தராஜ், கிருஷ்ணசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் அ.சா.ஆ. 6 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**

3. பின்னர் சாட்சிகள் 1 முதல் 8 வரையான சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்ததன் பேரில் இவ்வழக்கின் எதிரிகளை தேடியபோது எதிரிகள் மாண்புமிகு திருச்சிராப்பள்ளி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில்

முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. பின்னர் அ.சா.1 முதல் அ.சா.3 ற்கு கிசிச்சை அளித்த துறையூர் அரசு மருத்துவமனையின் மருத்துவர் கணபதி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி),323, 355, 506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக பதிவு செய்ததற்கான காரணம் குறிப்பிடவில்லை என்றால் மனு ரசீது வழங்கி விசாரணை செய்தேன். மனு ரசீதை இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை. நிலம் சம்மந்தமாக அ.சா.1 ற்கும், எதிரிகளுக்கும் பிரச்சினை இருந்தது தெரியும். மேற்படி நிலம் சம்மந்தமான முன்விரோதம் காரணமாக அ.சா.1 பொய்யாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. சாட்சிகள் அ.சா.1 ன் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிகள் அ.சா.1 ன் மீது வருவாய் அதிகாரிகளிடம் புகார் கொடுத்து அந்த புகார் நிலுவையில் இருந்து வந்தது என்றால் தெரியாது. அ.சா.1 மேற்படி வழக்கு சம்மந்தப்பட்ட இடம் அவருக்கு சொந்தமானது என்பதற்கான வருவாய் ஆவணங்கள் எதுவும் ஒப்படைக்கவில்லை. வழக்கின் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகாரை சரியாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/—அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்